பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளஸ்வ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஸூ சித்திரை மீ 14 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 01 (27-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 71

## ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கி
# தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை
# புரிந்து கொண்டதாக நிரூபித்து காட்டுங்கள்

### அரசுக்கும், ஏனைய கட்சிகளுக்கும் ஈரோஸ் எம். பி. பஷீர் அறைகூவல்

கொழும்பு, ஏப்ரல் 27

**அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தினை நீக்குவதன் மூலம், அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு காரியமாற்றத் தொடங்கிவிட்டது என்பதை நிரூபித்துக் காட்ட முடியும்.**

**இதுவே நிரந்தர அமைதிக்கான அடித்தளமாகக் கூட அமையலாம். இவ்வரலாற்றுக் கடமை, அரசாங்கத்தை மட்டும் சார்ந்தது அல்ல. அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த விடயமாகும்.**

*இவ்வாறு அரசாங்கத்துக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் அறைகூவல் விடுத்தார் ஈரோஸ் எம்.பி.யான ஜனாப் எஸ். பஷீர்.*

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார். அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

ஜனாப் பஷீர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

தற்போது வட-கிழக்கில் நிலவுகின்ற அமைதியென்பது நிரந்தரமானதா? தற்காலிகமானதா? அல்லது சாதாரண யுத்த நிறுத்தம் போன்றதா? என்ற கேள்வி எழுகின்றது. தெற்கில் வன்முறைகள் ஒழிக்கப்பட்டு விட்டதாக காட்டப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் வட-கிழக்கில் மீண்டும் வன்முறைகளையும், பிரச்சினைகளையும், அமைதியின்மையையும் காரணம் காட்டி இச் சட்டத்தினை தொடர்ந்தும் அமுலில் வைத்திருப்பதற்கான சூழல் தோன்றுவதனை நாம் விரும்பவில்லை.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் மூலமே வட-கிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகிறது. கடந்த கால அரசுகள் விட்ட தவறினைப்போல் இந்த அரசும் உளப்பூர்வமான ஓர் அரசியல் தீர்வினை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைகளைஅங்கீகரிக்காத வரையில் எதிர்காலத்தில் வடகிழக்கில் அமைதி என்பதனை எதிர்பார்க்கமுடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் இரண்டரை வருட கால தலைமறைவு வாழ்க்கைக்கு பின்பு வெளியில் வந்து விடுத்த முதலாவது அறிக்கையில் சில அம்

[ 5 ஆம் பக்கம் பார்க்க]

### தேவராஜ் விஜயம் ரத்து!

யாழ்ப்பாணம், ஏப் 27

இந்துகலாசார தமிழ்மொழி அமுலாக்கல் துணை அமைச்சர் பி. பி.தேவராஜின் யாழ்ப்பாண விஜயம் ரத்துச்செய்யப்பட்டது.

இது குறித்து யாழ். செயலகத்துக்கு நேற்று உத்தியோகபூர்வமாகஅறிவிக்கப்பட்டது.

துணை அமைச்சர் இன்று 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது. [இ-9]

### ரமழானை முன்னிட்டு 100 கைதிகள் விடுவிப்பு!

#### ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும்திட்டம் ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று அறிவித்தார்.

பொது மன்னிப்பின் பிரகாரம் ஒரு கைதியின் எஞ்சிய காலச்சிறைவாசம் ரத்துச் செய்யப்படவுள்ளது.

ஏனைய கைதிகள் சம்பந்தமாக ஒவ்வொரு வருடகாலத்துக்கும் மூன்று மாதச் சலுகை வழங்கப்படும்.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இனி ஆயுட்கால சிறைத்தண்டனை அனுபவிப்பர். பொது மன்னிப்பின் பிரகாரம் நூறு கைதிகள் விடுதலை செய்யப்படுவர்.

பொது மன்னிப்பு இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும்.

போதை வஸ்து தொடர்பாக சிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு எந்தவித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது. (ஒ-எ)

### மதுபானக் கடைகளும் இன்று மூடப்படும்!

கொழும்பு, ஏப்ரல் 27

இன்று ரமழான் தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள சகல மதுபானக் கடைகளையும் மூடுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் ரமழான் தினத்திற்காக சகல மதுபானக் கடைகளையும் மூடுமாறு அரசு உத்தரவிட்டது இதுவே முதற் தடைவையாகும். (உ)

### கடந்த மாதத்தில் படையினர் இழப்பில்லை

#### ஒருவர் தானும் இறக்கவில்லை!

கொழும்பு, ஏப்ரல் 27

கடந்த மார்ச் 15 ஆம் திகதி முதல் ஏப்ரல் 13 ஆம் திகதி வரையான ஒரு மாத காலப் பகுதியில் தீவிரவாத சந்தேக நபர்களின் நடவடிக்கைகளினால் பாதுகாப்பு படையினர் எவருமோ அல்லது பொலீஸாரோ உயிரிழக்கவில்லை.

ஆனால்தீவிரவாதிகளிலும், பொதுமக்களிலும் சுமார் 28 பேர் இந்தக் காலப்பகுதியில் உயிரிழந்தனர்.

சுற்றாடல், நாடாளுமன்ற விவகார அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேராநேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். (உ)

#### ஷார்ஜாகிரிக்கெட்:

### நியூஸிலாந்து அணியை ஆஸ்திரேலியா வென்றது

ஷார்ஜாவில் நேற்று நடைபெற்ற ''ஒஸ்ட்ரலேஷியா'' கிண்ணத்திற்கான இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி நியூசிலாந்து அணியை 63 ஓட்டங்களினால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி வழங்கப்பட்ட ஓவர்களில் 5 விக்கட் இழப்புக்கு 258 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இன்று வெள்ளிக்கிழமை பாகிஸ்தானும் இந்தியாவும் மோதுகின்றன. (உ-எ)

#### முச்சந்தி முரளி



ரமழானுக்கு விடுதலை மன்னிப்புப் போலை, அடுத்தது வெசாக்குக்கும் வரும். உப்பிடி சமய பண்டிகைகள் அடிக்கடி வந்தால் கைதிகளுக்கு அதிர்ஷ்டம் எண்டு சொல்லுங்கோ பின்னை......!

#### சுபநேரம்

வெள்ளிக்கிழமை சித்திரை 14

சுபநேரம்:
05-59முதல் 07-29 வரை
இராகுகாலம்
10-29 முதல் 11-59வரை
ரமழான் பண்டிகை

#### மா மூடைகள் அபகரிக்கப்பட்ட பின்னர்

### கொழும்பு நோக்கிச் சென்ற சரக்கு ரயில் தடம்புரண்டது!

திருகோணமலை, ஏப். 27

சீனக்குடா பிறிமா மா ஆலையிலிருந்து கொழும்பு நோக்கி மா ஏற்றிச் சென்ற சரக்கு ரயில், சுமார் ஆயிரம் மா மூடைகள் அபகரிக்கப்பட்ட நிலையில் பயணத்தைத் தொடர்ந்தபோது தடம் புரண்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பிரஸ்தாப ரயில் சம்பவ தினம் சீனக்குடா பிறிமா ஆலையிலிருந்து மா மூடைகளை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

ரயில் தம்பலகாமத்துக்கும் கந்தளாய்க்கும் இடையில் சென்றுகொண்டிருந்த போது வழி மறிக்கப்பட்டு சுமார் 1000 மா மூடைகள் அபகரிக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தை அடுத்து தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொண்ட ரயில் கந்தளாய்க்கும் கல்லோயாவிற்கும் இடையில் தடம் புரண்டது.

இதனால் இரண்டு நாட்கள் ரயில் சேவை இடம்பெறவில்லை. செவ்வாய் இரவு கொழும்பிலிருந்து வந்த பிரயாணிகள் ஹபறணையிலி

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சரணடைவுக் குழுவிடம் இதுவரை 35 பேர் சரண்!

சுயாதீன சரணடைவுக்குழுவிடம் இதுவரை 35 பேர் சரணடைந்தனர்.

தடுப்புக் காவலில் 8 ஆயிரத்து 493 தீவிரவாத சந்தேக நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

4 ஆயிரத்து 438 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை ஆயிரத்து 690 துப்பாக்கிகள் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இன்னமும் 4 ஆயிரத்து 400 துப்பாக்கிகள் ஒப்படைக்கப்படவுள்ளன.

இத் தகவல்களை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா செய்தியாளர்களிடம் நேற்று வெளியிட்டார். (ஒ-எ)

### 70 கொலைகளைச் செய்த 19 வயது இளைஞர் கைது!

கொழும்பு, ஏப். 27

70 கொலைகளைச் செய்த 19 வயதான இளைஞர் ஒருவர் கொழும்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

பத்துக் கொலையாளிகள் அடங்கிய குழுவில் இச்சந்தேக நபரும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் கைதான போது கொழும்பு நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றி வந்தார்.

இவர் டாக்டர் குளோடிஸ் ஜெயவர்த்தனா,திரு. தேவிஸ் குருகே ஆகியோரைத் தாமே கொலை செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். (இ-எ)

#### வடக்கு - கிழக்கு மக்களின்

### பிரச்சினையை அரசு இன்னும் சரியான முறையில் தீர்க்கவில்லை

#### நாடாளுமன்றில் அத்தாவுட எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 27

''வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் இன்னும் சரியான முறையில் தீர்த்து வைக்கவில்லை.''

ஐக்கிய சோஷலிச முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அத்தாவுட செனிவிரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது பற்றிய பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது அவர் இவ்வாறு கூறினார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மென்டிஸ், ''கடந்த காலச் சம்பவங்களைப் பாடமாகக் கொண்டு சகல அரசியல் கட்சிகளும் புதிய குறிக்கோளுடன் செயற்பட வேண்டும்'' என்று கூறினார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப், ''வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது'' என்றார். (ஒ-எ)

### யாழ். பல்கலைக் கழகப் பேரவை சமர்ப்பித்த 11 திட்டங்கள் முடக்கம்

#### மானிய ஆணைக்குழு ஒத்துழைப்பதில்லை என கவலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மூதவையும், பேரவையும் காலத்துக்குக் காலம் பல்கலைக்கழக மானியக் குழுவுக்குச் சமர்ப்பித்த பல ஆலோசனைகள் திட்டங்களில் பதினொரு திட்டங்கள் இன்னமும் முடங்கிக் கிடப்பதாக யாழ். பல்கலைக் கழக வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிக்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் அனுசரணை குறைவாகவே இருந்து வருகிறது என்றும் அதே வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளன. மத்திய அரசின் அதிகார நிலையங்களும் யாழ். பல்கலைக் கழகத் தேவைகள் குறித்து அலட்சியமாக நடந்து கொள்வதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தொடக்கப்பட்ட காலத்தில் இருந்தே விவசாய பீடம், பொறியியல் பீடம் அமைப்பதும் பல்கலைக்கழகத்தின் ஒன்றிணைந்த திட்டத்தில் அடங்கியிருந்தது. விவசாய பீடம் சம்பந்தப்பட்ட

[5 ஆம் பக்கம் பார்க்க)

#### ஈதுல் பித்ர் வாழ்த்து

முஸ்லிம் வாசகப் பெருமக்களுக்கும், மற்றும் விளம்பரதாரர், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் உதயனின் ''ஈதுல் பித்ர்'' நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

(ரமழான் சிறப்பிதழ் உள்ளே)

### ரமழான் இன்று

கொழும்பு, ஏப்ரல் 27

ரமழான் பண்டிகை இலங்கையில் இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று மாலை கூடிய சதிப்மார், உலமாக்கள் கூட்டத்தில் இந்த முடிவுஎடுக்கப்பட்டது.

நேற்று இரவு பிறை தென்பட்டதைத் தொடர்ந்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இருந்து அறிவிக்கப்பட்டது. (அ)

### "டைம்" சஞ்சிகை மீது சட்ட நடவடிக்கை எடுப்பதா?

#### அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு, ஏப் 27

''செய்தியாளர்களுக்கு வேட்டு'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை ஒன்றைக் கொண்டிருந்த (அமெரிக்க) ''டைம்'' சஞ்சிகையே இலங்கையில் விற்பனைக்கு அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியிலிருந்து அனிதா பிரதாப், எட்மண்ட் டபிள்யூ.

(5 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகில் நன்னீர் சுற்றாடலில் 6 பரப்பு காணி முழுதாக விற்பனைக்குண்டு தொடர்பு; கண்ணன் துர்க்கை அம்மன் கோவிலடி, No - 45 தாளையம்பதிவீதி நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (12376)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர்(புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### படகு விற்பனைக்கு

32 அடி நீளமுடைய மீன்பிடி உபகரணங்கள் கொண்ட படகு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி Upali Munasinghe "Jayamala" St. Peters Road, Maggona Kalutara.

### வகுப்புக்கள்

Radio TV Deck Air Conditioning Refrigeration வயறிங் வெல்டிங் வைண்டிங் பிளம்பிங் மோட்டார்மெக்னிஸம் Typing Spoken English புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. [12954]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 29-4-90 ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3298)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(பிலிமத்)கறுப்புவரிச்சேவல் குஞ்சுகள்(Lohmann) பிறவுண் சேவல் குஞ்சுகள் 1. 5. 90 செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க இல 9 கந்தையா லேன், சுன்னாகம்(புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3407)

### தேவை

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை A/L விஞ்ஞானம் படித்தவர்கள் விரும்பத்தக்கது தகுதியுடையோர் காலை 8 00 மணி முதல் பி. ப 4.00 வரைக்குள் நற்சான்றிதழ்கள் உடன் 01. 05. 90ற்கு முன் நேரில் வரவும் திறமைக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும் Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி' யாழ்ப்பாணம் (C/4331)

இறைண்டிங் மில் தூள் அரைக்கும் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. இங்கு தங்கி வேலைசெய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்பு ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும். ஆறுமுகம் அன் சன்ஸ், கண்டி வீதி, ஓமந்தை. (C/ 4336)

### தேவை

தச்சு வேலைக்கு நல்ல அனுபவமுள்ள இருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். S. K. தச்சுத்தொழிற்சாலை, நெத்தலி ஆறு, தர்மபுரம், சாப்பாடு, இருப்பிடம் தரப்படும். (C/4334)

லூகஸ் கட்டைகள் கடையக்கூடிய ஒருவர் தேவை தச்சு வேலையிலும் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். சாப்பாடு தங்கும் வசதி தரப்படும் .S K தச்சுத் தொழிற்சாலை, தருமபுரம். (C/4335)

### பூசகர் தேவை

ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானத்தின் இருகாலப் பூசைக்கு பிராமணக் குடும்பஸ்தர் உடன் தேவை. வீட்டு வசதி உண்டு. தருமகர்த்தா அராலி மேற்கு வட்டுக் கோட்டை. (3296)

### Saairaam

பாவித்த T.Vகள், கடைத் தளபாடங்கள் perkins (p-6) டீசல் இஞ்சின் A 40 Van விற்பனைக்கு உண்டு. மற்றும் உங்கள் பழைய பொருட்களை வாங்கவும் விற்கவும் Saairaam 3ம் கட்டை, பருத்தித்துறைவீதி. கல்வியன்காடு (12389)

### கை மாறி விட்டது

25. 4 1990 காலை 11 மணியளவில் எனது நீலநிற Gents Bicycle StanleyRd A G. Electrical Stores அருகாமையில் தவறுதலாக கை மாறிவிட்டது. Bicycle மாறி எடுத்தவர் கீழ் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் A. பத்மநாதன் 245 நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (12381)

## இந்தியா- நேபாள

# நட்புறவு உடன்படிக்கையை ரத்துச் செய்யக் கோரிக்கை

### காத்மண்டுவில் பிரதமருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

காத்மண்டு, ஏப் 26

1950 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் நேபாளம் செய்து கொண்ட உடன்படிக்கையை உடனடியாக ரத்துச் செய்யும்படி நேபாள மக்கள்இளைஞர் அரங்கு பிரதமர் கிருஷ்ணபிரசாத்தாரியிடம் கோரிக்கை விடுத்து உள்ளது.

அமைதி -நட்புறவு பேணும் இந்த உடன்படிக்கையின் பல அம்சங்கள் இந்தியாவுக்குச் சாதகமாக அமைந்திருப்பதாக இந்த அரங்கு கூறியிருக்கிறது.

இந்த உடன்படிக்கையை ரத்துச் செய்யும்படி கம்யூனிச சார்பு ஐக்கிய தேசிய மக்கள் இயக்கமும் அரசைக்கோரியுள்ளது. (எ)

# போர் விமானத் தயாரிப்பில் ஈராக் தீவிரமாக ஈடுபாடு!

பக்தாத், ஏப் 26

சண்டை விமானங்களைத் தயாரிப்பதில் ஈராக் ஈடுபட்டுள்ளது.

ஈராக் விமானப்படைத் தளபதி மௌலபம் சாஏப் ஹாசன் இத்தகவலை வெளியிட்டார்.

'நாட்டின் பாதுகாவலன்' என்ற இராணுவ சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் "ஈராக்கின் மீது தாக்குதல் நடத்த இஸ்ரவேல் எடுக்கும் எந்த முயற்சியையும் முளையிலேயே கிள்ளி எறியவே சண்டை விமானங்களை தயாரிப்பதாக ஈராக் விமானப் படைத் தளபதி சொன்னார்.

# குவைத்தில் ஜனநாயகஆட்சி மீண்டும் ஏற்படும் அறிகுறி

குவைத், ஏப் 26

மத்திய கிழக்கு நாடான குவைத்தில் ஜனநாயக ஆட்சியை மீண்டும் கொண்டுவரும் முயற்சி எடுக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு ஒப்பானதேசியக்கவுன்சில்ஒன்றை அமைக்கும்படி தனது அதிகாரிகளுக்கு குவைத் மன்னரான ஷேக் ஜபார் அல்- அஹ்மத் அஸ்-ஸபா உத்தரவிட்டிருக்கிறார்.

இஸ்லாமிய ஸரியா சட்டத்திற்கு அமைய நாட்டின் ஐக்கியத்தை உத்தரவாதப்படுத்தக்கூடிய சட்டங்களைத் தயாரித்துக்கொண்டு வர தேசியக் கவுன்ஸிலுக்கு நான்கு ஆண்டு கால அவகாசம் வழங்கப்படவுள்ளது. [எ]


# கம்பியூட்டர் கல்வி

**DBASE III +**

ஆரம்பம்: 28 April 1990

**LOTUS 1-2-3**

ஆரம்பம்: 28 April 1990 9.00 a.m

VERBATIM (2S, 2D) Floppy Discs எம்மிடம் விற்பனைக்குண்டு.




UNIKCO COMPUTER CENTRE

No. 5, Power House Road, 2nd Lane, JAFFNA.

(சி-4329)


# பகிரங்க ஏல விற்பனை

நயினாதிவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வருடாந்த உயர் திருவிழா எதிர்வரும் 23 - 6 - 1990 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறது. இதனையொட்டி வருடாவருடம் ஏலவிற்பனையில் விடப்படும் கடைகள் எதிர்வரும் 20 - 5 - 1990 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11 - 00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும் கேள்விகளில் பங்குபற்றுபவர்கள் கேள்வியின் முழுத்தொகையையும் செலுத்த வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட கடைகளே இம் முறை அனுமதிக்கப்படும் செலுத்திய பணம் மீளக்கொடுக்கப் பட மாட்டாது.

குறிப்பு: அம்பாளின் பெயரால் பல பேர்கள் பல விதமான ஏமாற்று மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தயவு செய்து எங்கள் ஆலயத்தின் பெயரால் எவரிடமும் எவ்விதமான நிதிகளையோ பொருட்களையோ வழங்க வேண்டாம் என அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆ. தியாகராசா
கௌரவ செயலாளர்

நயினாதிவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், அறங்காவலர் சபை சார்பாக. 23 - 4 - 90

(சி/4330)


# BASF குமுலுஸ் D.F.


குமுலுஸ் D.F. போட்டி

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி – | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி – | 5 |
| கைத்தெளி கருவி – | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி – | 20 |
| எவரெடி ரோச் லைற் – | 48 |
| ரீ சேட் – | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







FINCHEM AGRO DIVISION

பின்லே கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

பெயர் ______
முகவரி ______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**


## இந்து அதிகாரிகள் மறுப்பு

ஜம்மு, ஏப் 26

இந்துமதத்தைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு சென்று பணிபுரிய மறுத்து வருகிறார்கள்.

## ஆஸ்திரேலியா முடிவு

புதுடில்லி ஏப் 26

பாகிஸ்தானுக்கு ஆறு போர் விமானங்களை விற்கப்போவதாக ஆஸ்திரேலியா அறிவித்திருக்கிறது.

இதற்கு இந்தியா பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் உள்ள ஆஸ்திரேலியா தூதர் வெளியுறவு அமைச்சு அலுவலகத்துக்கு வரவழைக்கப்பட்டு, அவரிடம் கண்டனக் குறிப்பு கையளிக்கப்பட்டது. (எ)

## ஆயுதக்கிடங்கு எரிந்தது!

காபூல், ஏப் 26

ஆப்கான் தலைநகர் காபூலில் கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய தாக்குதல்களில் அரசுக்குச் சொந்தமான ஆயுதக்கிடங்கு ஒன்று தீப்பற்றிக் கொண்டது.

கெரில்லாக்கள் ஏவிய ரொக்கட்டுக்கள் ஆயுதக் கிடங்கு மீது விழுந்து வெடித்தன. (எ)

## துப்பாக்கிச் சண்டையில் பலி


மார்ஸல்லா (ஸ்பெயின்) ஏப் 26

பிரிட்டனின் மிகப்பெரிய ரயில் கொள்ளைச் சம்பவத்தில் குற்றஞ் சாட்டப்பட்டு. 30 ஆண்டு கால சிறைத்தண்டனை பெற்ற சார்ளி வில்ஸன் ஸ்பெயின் நகரான மார்பெல்லாவில் நடந்த துப்பாக்கிச்சண்டை ஒன்றில் கொல்லப்பட்டார்.

1963 இல் இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது. அப்போது ரயிலில் கொண்டு போகப்பட்ட 60 லட்சம் டாலர் பணம் கொள்ளையிடப்பட்டது.

அக்கொள்ளையை நடத்தியகோஷ்டியின் 'பொருளாளர்' ஆக வில்ஸன் கருதப்பட்டார். (எ)

# 2ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



வீரவேங்கை
(முரளி சாள்ஸ்) லெப்டினன்ட்
**கந்தவனம் தவக்குமார்**

தாயின் மடியில்: 10 - 04 - 1963
மண்ணின் விடிவிற்காக: 27 - 04 - 1988
திதி: 05 — 05 — 1990

அன்பின் செல்வமே மண்ணை மீட்க விண்புகுந்த வீரனே! எமைப் பிரிந்து ஆண்டு இரண்டாகின்றன. முரளி! எத்தனை ஆண்டு சென்றாலும் உன்னை மறக்க எம்மால் முடியுமா? மறக்க நினைக்க நின் நினைவு தான் பீறிட்டு வருகின்றது. எத்தனையோ சுகபோகங்களுடன் வாழ வசதியிருந்தும் யாவற்றையும் வீசி விட்டு மண் காக்க விரதம் பூண்டாய் தமிழீழம் பெறக் கனவு கண்டாய் நின்கனவு நனவாக வேண்டுமென இறைவனை வேண்டி உனக்கும் உன்னுடன் விண்புகுந்த **கப்டன் மோகன் மாஸ்டருக்கும் இளம்புலி பட்சத்திற்கும்** எமது கண்ணீர்ப் புஷ்பங்களைக் காணிக்கையாகச் செலுத்துகிறோம்.

அன்பு அப்பா, அம்மா, அருமை அண்ணா, அண்ணி, பாசமிகு அக்கா, அத்தான், உறவினர்கள், நண்பர்கள்.

ஜெயமலர் அகம்
கப்புதா,
கரவெட்டி.

[3361]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.

**பொருள்:**

விண்மீன் திங்களையும் இவளுடைய முகத்தையும் வேறுபாடு கண்டு அறிய முடியாமல் தம் நிலையில் நிற்காமல் கலங்கித் திரிகின்றன.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.　தொலைபேசி: 2288

27 - 04 - 1990　த. பெ இலக்கம் 25


# குடியானவன் மாகாணசபை!

அரசாங்கக் காணிகள் சம்பந்தமாக, காணி அமைச்சின் செயலாளர் திரு. ஏ. ஏ. விஜேதுங்க அண்மையில் வெளியிட்டிருந்த தகவல், தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

சகல அரசாங்கக் காணிகளும் அரசுக்கே சொந்தமாக இருக்கும். அந்தக் காணிகள் மாகாண சபைகளுக்குச் சொந்தமாக்கப்பட மாட்டா. அரசியல் சாசனத்தின் 13 ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் அரசாங்கக் காணிகள் யாவும் மத்திய அரசுக்கே உரித்துடையவை. ஆனால் அவற்றை மாகாண சபைகள் தமது திட்டங்களைச் செயற்படுத்தப் பாவிக்கலாம். ஒருபோதும் சொந்தம் கொண்டாட முடியாது: காணிகளுக்கு உரித்துக்கோர முடியாது — இவ்வாறு அவர் விளக்கி இருக்கிறார்.

ஊவா மாகாணத்தில் உள்ள எல்லா அரசாங்கக் காணிகளையும் ஊவா மாகாண சபை பொறுப்பேற்கப் போகிறது என்று வெளியான தகவல் ஒன்றைத் தொடர்ந்தே திரு. விஜேதுங்கா இந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்.

திரு. விஜேதுங்காவின் விளக்கத்தைச் சுருக்கமாகச் சொல்வதானால், அரசாங்கக் காணிகளை மாகாணசபைகளுக்குக் குத்தகைக்குக் கொடுப்பது போலவே மத்திய அரசு வழங்கும். மாகாணசபை சொந்தம் கொண்டாட முடியாது என்பதே ஆகும்.

இங்கே பெரும் வேடிக்கை ஒன்றைக் காணமுடிகிறது. மத்திய அரசாங்கம் நிலச்சுவாந்தார்; மாகாணசபை குடியானவன் என்ற வர்க்கபேதம் ஆட்சி அதிகாரப் பரவலில் இடம் பெறுகிறது. ஜனநாயக சோஷலிசத்துக்கு இந்த வர்க்க பேதம் எப்படிப் பொருந்தும்?

மாகாணசபைகள், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக வைக்கப்பட்ட ஒரு திட்டம். அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆரும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இந்த மாகாணசபை தமிழர்களுக்கு பெரும் வரப்பிரசாதம் என்று பெரிதுபடுத்திக் காட்டினார்கள். குறிப்பாகத் தமிழர்களின் உரிமைகளை எல்லாம், கோரிக்கைகளை எல்லாம் மாகாணசபை பெற்றுத் தரும் என்று ராஜீவ் காந்தி பம்மாத்துப் பண்ணினார். தமிழர்கள் சுயாட்சி பெறுவதற்கு இது முதற்படி என்றும் முட்டாள் தனமாக முழங்கினார்,

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகளில் பெங்களூர் பேச்சும் ஒன்று. அங்கு வைத்தே தமிழர் தாயகக் கோட்பாடு நான்கு அடிப்படைக் கோரிக்கைகளில் ஒன்றாக முன்வைக்கப்பட்டது. தமிழர் தாயகக் கோட்பாட்டைத் தவிடு பொடியாக்குவதற்காகத் தான் ஜே. ஆர். காணி விவகாரத்தில் மாகாணசபையை மத்திய அரசின் குத்தகைக் குடியானவன் ஆக்கினாரோ என்று எண்ணத்தோன்றுகிறது!

மாகாணசபை தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல. அவர்களின் சுயநிர்ணய உரிமைகளை வழங்கக்கூட அதில் வாய்ப்பு — வசதி— செய்யப்படவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இதனை இந்தப் பத்தியில் ஏற்கனவே நூறு தடவைகளுக்கு மேல் எடுத்து உணர்த்தியுள்ளோம்.

எனினும்மாகாணசபையைஒருபேச்சுக்காக ஆராய்ந்து பார்த்தாலும், அது குறிப்பிட்ட மாகாண மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டசபை. அந்தப் பகுதி மக்கள் தமது அலுவல்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ள பிரஸ்தாப சபை மூலம் ஆரம்ப அளவில் அதிகாரம் கிள்ளித் தெளிக்கப்பட்டுள்ளது. மக்கள் ஆட்சி என்ற பெயரில், அற்ப சொற்பமாக வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு தானும் அந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முதலில் தேவைப்படுவது மண்; அந்த மண்ணின் வளம். மண்ணே பிரதானம்.

அந்த மண் மாகாணசபைக்குச் சொந்தமில்லை என்றால், அதனால் மாகாணத்தை எப்படி வளம்படுத்த முடியும்? மக்களுக்கு எவ்வாறு வாழ்வளிக்க முடியும்? மக்கள் ஆட்சி நடக்க வேண்டும் என்று உண்மையாகவே விரும்பினால் மண் வளத்தையும், மண்ணையும் மத்திய அரசு சுரண்ட வேண்டிய அவசியம் ஏன்?

முதலாளித்துவ கோட்பாட்டில் ஊறிய திரு. ஜே. ஆர். மாகாணசபை அமைப்பிலும் அதனை ஊற்ற வேண்டும் என்று திட்டமிட்டுச் செயலாற்றி இருக்கிறார்!

தனிமனித வாழ்க்கையில், சமூக மட்டத்தில் உழைப்பவனுக்கே மண் சொந்தமாக வேண்டும் என்ற சிந்தனை மலர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும் காலம் இது. அரசியல் அதிகாரத்தில் அந்தச் சித்தாந்தத்தை மறந்து செயற்படுவது சுத்த அபத்தம்.

வடக்கு - கிழக்கில் உள்ள அரசாங்கக் காணிகளில் திட்டமிட்ட குடியேற்றம் நடந்தது; நடக்கிறது. அதனை மேலும் வலுப்படுத்தவே, குடியானவன் நிலையில் உள்ள மாகாண சபை உதவும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல நிலப்பரப்பும் மாகாண சபைக்கே சொந்தம் என்ற பிரதான நிலை உருவாக்கப்பட வேண்டும். அதன் பின்னர் தான், அது ஒரு ஆட்சி அதிகாரப்பரவல் அமைப்புத்தானா என்பதை ஆராய முடியும்.

## புத்தாண்டு விழா

சாவகச்சேரி ஏப் 27

தனங்கிழப்பு ஸ்ரீ அம்பாள் ஆலயத்தில் புத்தாண்டு விழா நிகழ்ச்சிகள் சிறப்புற இடம் பெற்றன.

திரு. எஸ். ஜெவப்பிரகாசம் தலைமையில் இடம் பெற்ற இவ் விழாவில் சரசாலை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. கு. ஞானேஸ்வரன், தனங்கிழப்பைச் சேர்ந்த திரு. க. பேரின்பநாதன் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

சரசாலைஇந்து இளைஞர் மன்றத்தின் கண்ணகி வில்லுப் பாட்டு சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. (இ-31)

## பாடசாலையை மீண்டும் திறக்க தீர்மானம்

நெடுந்தீவு ஏப் 27

நெடுந்தீவு கிழக்கு இராமநாத வித்தியாசாலைக்கு புதிய கூரை அமைத்து மீண்டும் அதனைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விஷமிகளின் செயலால் இப்பாடசாலை தற்போது கூரை இல்லாது காட்சியளிக்கிறது. (இ-111)

## நெடுந்தீவுக்கு மீன் சந்தை

நெடுந்தீவு ஏப் 27

நெடுந்தீவு மத்தியில் புதிய மீன் சந்தைக்கான கட்டடம் ஒன்றை நெடுந்தீவு பிரதேச சபை அமைக்கவுள்ளது. இதற்கான நிதி ரூபா 90 ஆயிரம் புனர்வாழ்வு அமைச்சிடம் பெறப்படும். (இ-111)

கடந்த கால பருவ மாற்றங்களுக்கு அமைய

# வவுனியாவில் விவசாய துறையை அபிவிருத்தி செய்ய முயற்சி

### விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நடத்துகிறது

வவுனியா, ஏப் 27

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில வருடங்களாக நிலவும் பருவகால மாற்றத்துக்கு ஏற்ப விவசாய முயற்சிகளில் புதிய — கூடிய பொருளாதார வாய்ப்புகளுக்கான வழிமுறைகள் குறித்து வவுனியா விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென இரண்டு லட்சம் ரூபா நிதியையும், மற்றும் தேவையான உதவிகளையும் வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் வழங்கியுள்ளார்.

முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தின் உழுந்து செய்கை பற்றியும், அதில் கையாளப்படக்கூடிய நவீன தொழில்நுட்ப முறைகள் பற்றியும் நிலப் பயன்பாடு மற்றும் பொருளாதார வாய்ப்புகள் பற்றியும் விவசாயக் கல்லூரி மாணவர்கள் தற்போது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இம்மாவட்டத்தின் கால் நடை வளம், அவற்றின் பொருளாதார முயற்சிக்கான பயன்பாட்டில் நிலவும் குறைபாடுகள், அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் என்பன குறித்த ஆராய்ச்சியிலும் கல்லூரி மாணவர்கள் ஈடுபடவுள்ளார்கள் என்று கல்லூரியின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-164)

# குடா நாட்டிலிருந்து மலையகத்துக்குச் சுற்றுலா

### வழமை நிலையைத் தொடர்ந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஏப் 27

தெற்கில் இருந்து மட்டும் மக்கள் சுற்றுலா என்னும் பயணம் இன்னும் வடக்கே வரவில்லை.

வடக்கில் இருந்தும் மலையகம், தென்னிலங்கை ஆகிய பகுதிகளுக்குச் சுற்றுலாக்கள் தொடங்கிவிட்டன!

பாதுகாப்பு மற்றும் நாளாந்த நிகழ்வுகள் இயல்பு நிலைக்கு மாறிவிட்டதால் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்தோர் மறு பிரதேசத்தைப் பார்த்துப் பொழுதைக் கழிக்கும் நிகழ்ச்சிகள் மீண்டும் ஆரம்பமாகிவிட்டன.

நாட்டில் நிலைமை வழமைக்குத் திரும்பியதை அடுத்து வடபகுதி மாணவர்கள் பலர் சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு வெளிமாகாணங்களுக்குச் செல்லத்தொடங்கியுள்ளனர். இவ்வகையில் யாழ். நகரைச் சேர்ந்த தனியார் கல்வி நிறுவனம்ஒன்றைச்சேர்ந்த சுமார் 200 மாணவர்கள் தமது ஆசிரியர், பெற்றோர்களுடன் 5 நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு மலை நாட்டிற்கு சென்றுள்ளார்கள்.

கண்டி மற்றும் பதுளை, பண்டாரவளை, கம்பளை ஆகிய பல மலையகப் பகுதிகளைச் சுற்றி பார்த்தபின் இவர்கள் யால, சிகிரியா போன்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் செல்வார்கள்.

உடுவில் சமய ஸ்தாபனம் ஒன்றைச் சேர்ந்த தொண்டர்கள் பலரும் பண்டாரவளைக்குச் சுற்றுலாச் சென்றுள்ளார்கள்.

குடாநாட்டிற்குள் நீண்டகாலமாக முடங்கிக்கிடந்த எமக்குவெளிப்பகுதிகளைப்பார்த்து ஓய்வுபெறுவதுதேவைப் படுகிறது:-அதுவேளமது சுற்றுலாவிற்கு உந்துதலாக இருந்தது- என்று மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (அ-7)

# இரு ஜே.வி.பி உறுப்பினர்கள் வவுனியாவில் சரணடைந்தனர்

வவுனியா, ஏப் 27

வவுனியா மாவட்டத்தில் ஐந்து பேர் அடங்கிய சரண் அடையும் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டு ஜே வி. பி. உறுப்பினர்கள் சரணடைந்துள்ளனர் என்றும் அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இராணுவ பிரிகேடியர், வண. ஜே. கனகரட்னம் அடிகளார், வண. சியம்பலாஸ்வெவ விமலசார தேரர், திருவாளர்கள் எஸ். அப்புகாமி, வி. சே. இரத்தினசிங்கம் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகின்றார்கள்.

இக்குழுவுக்குத் தலைமையாக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் இருப்பார் என்றும் இவர் வவுனியா பொலனறுவை மாவட்டங்களின் சரண்குழுக்களுக்குப் பொறுப்பாக இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் வவுனியா மாவட்டப்பகுதியிலிருந்து அரசாங்க அதிபரிடம் சரண் அடைந்துள்ள இரண்டு ஜே. வி. பி. உறுப்பினர்களும் சரண் குழுவுக்குப் பொறுப்பான நீதித்துறை அதிகாரி வரும்வரை அரசாங்க அதிபரின் பராமரிப்பில் இருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-164)

15 லட்சம் வீடுகள்:

# விண்ணப்பம் வழங்கும் வேலை நேற்றுடன் பூர்த்தி அடைந்தது

குருநகர் ஏப் 27

15 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 15 ஆயிரத்துக்கு உட்பட்ட தொகையை கடனாகப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் வேலைகள் நேற்று 26 ஆம் திகதியுடன் பூர்த்தி அடைந்தன.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ் ம நகர

(5 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு மக்கள் வங்கி

# பணக் கொடுக்கல்-வாங்கல் 'ஜெசி' தியேட்டர்கருமபீடத்தில்

யாழ்ப்பாணம் ஏப் 27

முல்லைத்தீவு மக்கள் வங்கியின் பணக் கொடுக்கல் வாங்கல்கள் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு "ஜெசி" தியேட்டரில் அமைந்துள்ள விசேஷ கருமபீடம் ஊடாக நடைபெற்று வருகின்றன.

இந்த கருமபீடத்தை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். இத் தகவல்களை மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்திருக்கிறார். (இ)

## நினைவில் இன்று

27- 04- 1990

- புலோலியூர் சந்த முருகேசனார் நினைவு தினம்
- டோஹோ குடியரசு தினம்

நடேஸ்வராக் கல்லூரியில்

# ரூ. 26 லட்சம் செலவில் ஆய்வு கூடமும் நூலகமும்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி மூலம் 26 இலட்சம் ரூபாய் செலவில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் புதியவிஞ்ஞான ஆய்வு கூடமும், புதிய நூலகமும் நிறுவப்படும். இதற்கான அங்கீகாரத்தை மத்திய கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

ஏற்கனவே இக் கல்லூரியில் இருந்த விஞ்ஞான ஆய்வு கூடமும் நூலகமும் சுமார் 90வருட காலம் பழமை வாய்ந்தவை.

அண்மைய அசம்பாவிதச் சம்பவங்களின் போது சேதமடைந்துள்ள இவை இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

காங்கேசன்துறைக் கொத்தணி அதிபரான இக்கல்லூரி அதிபரின் முயற்சியாலேயே இது அமைக்கப்படவுள்ளது. குறிப்பிடத்தக்கது. (இ-119)

# தந்தையின் மறைவுக்குப் பின் என்ன செய்ய வேண்டும்?




ஹஜ்ரத் அபூ அஸ்யத் மாலிக் இப்னுரபீஆ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ''நாம், பெருமானார் (ஸல்) அவர்களின் திருச்சமூகத்தில் ஆஜராகி இருந்தோம். பனூ ஸல்மா குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வருகை தந்த அல்லாஹ்வின் நபியே! என் பெற்றோரின் மறைவுக்குப் பின் அவர்களுடன் நன் முறையில் பழகுவதில் ஏதேனும் பாக்கி உண்டா?'' என வினவினார். ''ஆம்! ஆம்! அவர்களுக்காக நீர் பிரார்த்தனைகள் புரிய வேண்டும், அவர்களின் பாவமன்னிப்பிற்காக பிரார்த்தனைசெய்ய வேண்டும்; அவர்களின் உறவினர்களை அரவணைத்து நடக்க வேண்டும், அவர்களின் நண்பர்களுக்குக் கண்ணியம் அளிக்க வேண்டும்'' என பெருமானார் (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.

[அபூ தாவூத்]

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''தந்தையுடன் நன்முறையில் பழகுவதன் உயர்ந்த அந்தஸ்தாகிறது. அவர்கள் சென்றபின் அவர்களுடன் சம்பந்தம் வைத்தவர்களுடன் நன் முறையில் பழகுவதாகும்.'' [முஸ்லிம்]

## வாசகர் திருமுகம்

### யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் யாழ். தொழில் நுட்பக கல்லூரிக்கு புதிய மாடிக் கட்டடத் தொகுதியை நிறுவுவதற்கும், கட்டடங்களை புனரமைப்பதற்கும் 8 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ஆனால் இவ் வேலைகளைத் தொடங்குவதில் ஒரு அசமந்தப் போக்குக் காணப்படுகின்றது.

ஏற்கனவே உள்ள கட்டடங்கள், மலசலகூடம், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக்கூட திறந்த பல்கலைக்கழகத்திற்கு எடுத்துள்ளதால் மாணவர்களின் அடிப்படை வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் கல்லூரியில் வெற்றிடமாகும் விரிவுரையாளர் இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

மேற்கூறப்பட்ட விடயங்களை அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டுகிறோம்.

**வணிக மாணவர் மன்றம்**
தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

### மாவடி விறகுகாலை

வட்டுக்கோட்டை மாவடி அரசினர் விறகுகாலையில் விறகுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதே வேளையில் தனியார் விறகு காலையில் போதியளவு விறகு உள்ளது. ஆனால் விலை தான் கூடுதல்

மேற்படி விறகுகாலை அராலி, கொட்டைக்காடு, வட்டுக்கோட்டை மூளாய் றோட், மூளாய், மாவடி புளியடி, சித்தங்கேணி ஆகிய கிராமங்களுக்கு சேவைபுரியும் விறகுகாலை ஆகும்.

இந்த அரசாங்க விறகுக் காலையில் அதிகளவு விறகைப் பெற அதிகாரிகள் முயற்சி எடுத்து பாவனையாளர் கஷ்டத்தை நீக்க வேண்டும்.

வ. சிவம்,
வட்டுக்கோட்டை.

### நிற்காத பஸ்கள்

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்புள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்கள் சில நிறுத்தப்படுவதில்லை.

இதனால் மேற்படி வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர் அதிக சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

இ. போ. ச. கவனிக்குமா?

சி. வ. ராசா,
கொழும்புத்துறை.

## ★ செய்திக் கொத்து ★

### மீளச் சேர்க்குமாறு கோரிக்கை

நெடுந்தீவு ஏப் 27

நெடுந்தீவு அரசபடகுச் சேவையில் பணியாற்றி வன்செயல் காரணமாக கடமைகளுக்குச் சமூகமளிக்காதிருந்த முன்னைய ஊழியர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு நெடுந்தீவு முன்னேற்றக் கழகம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடபிராந்திய அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடும் காற்றுக் காலங்களில் கூட படகுச்சேவை தடைப்படாதவாறு அவர்கள் மிகத் திறமையாகப் பணியாற்றியுள்ளனர். என்றும் கழகம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (ப-111)

### பாலம் இருளில்

முல்லைதீவு, ஏப் 27

முல்லைத்தீவு - செல்வபுரம் வீதியில் உள்ள சின்னாற்றுப் பாலத்தில் உள்ள மூன்று மின்கம்பங்கள் பல மாதங்களாக விழுந்த நிலையில் உள்ளன. இதனால் இப்பாலம் இருளில் மூழ்கி இருக்கிறது. [இ-92]

### செஞ்சிலுவை சங்க தினம்

கொழும்பு, ஏப் 27

உலக செஞ்சிலுவைச் சங்க தினத்தையொட்டி மேமாதம் 8 ஆம் திகதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் விசேஷ இரத்ததானஇயக்கம் ஒன்றை கொழும்பு தர்மபால மாவத்தையிலுள்ள அதன் தலைமை காரியலயத்தில் நடத்த இருக்கின்றது.

மனித உயிரையும் கௌரவத்தையும் பாதுகாப்பது இந்த ஆண்டு செஞ்சிலுவைச் சங்க தினத்தின் முக்கிய கருப்பொருளாக இருக்கும் என அறிவிக்கப்படுகிறது. [க]

### முல்லை வங்கியில்

முல்லைத்தீவு, ஏப் 27

முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் வீடமைப்பு மானியம், மீளக்குடியமர்ந்தோருக்கான ரூபா 2000/- ஆகியவை 450 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் பல குடும்பங்கள் மிக விரைவில் இவற்றைப் பெற உள்ளன என முகாமையாளர் திரு. எஸ். விக்னராசா கூறினார். (இ-92)

### 773 பஸ் சேவை

சுழிபுரம், ஏப் 27

மூளாய், அச்சுவேலி, பருத்தித்துறை 773 இலக்க பஸ் சேவையை உடன் ஆரம்பித்து நடத்துமாறு சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட பகுதி இ. போ. ச. அதிகாரிகளை வேண்டியுள்ளனர். [இ-28]

### எழுத்தாளர் பயிற்சி

சாவகச்சேரி ஏப்ரல் 27

அறவழிப் போராட்டக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கான பயிற்சி கைதடி நவில்ட் பாடசாலையில் குழுவின் பிரதித்தலைவர் திரு கோ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் ஆரம்பமானது.

## நாணய மாற்று விகிதம்

25-04-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.25 | 231 21 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997 10 | 4002 85 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6525 33 | 6558 08 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2347.76 | 2371 67 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 697 42 | 708 89 |
| 100 | ஜப்பானிய யென் | 25.0396 | 25.2902 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் ரமழான் பெருநாள் சிறப்பிதழ்

## ஈதுப் பெருநாள் வருகவே!

இறைவன் அருளைச் சுரந்து வரும்
எழிலாம் ஈதுப் பெரு நாளே
குறையை நீக்கி நிறைவு எனும்
குளிர்ச்சி நல்க வருவாயே!

வாடிய வயிறுடன் பேரிறையை
வணங்கிய மாத முடிவினிலே
கூடிடும் நோன்புப் பெருநாளே
குறைகள் போக்க வருவாயே!

தூய மறையாம் திரு குர் ஆன்
தோற்றம் பெற்ற மாதமதில்
தோன்றும் இன்பப் பெருநாளே
துயரம் போக்கிட வருவாயே!

எத்திக்கும் ஒலிக்கின்ற திருமறையை
இன்பமுடன் சேட்டிருந்த மாதமதில்
தித்திக்கும் பெருநாளே வருவாயே!
தீவினை அழித்திட வருவாயே!

ஈயும் ரமழான் மாதத்தை
இணைந்தே வந்திடு பெருநாளே!
காயும் வறியோர் துயர் தீர்க்க
கருணையோடு வருவாயே!

யாழ். அலீம்

## மனிதர் ஜீவகாருண்யத்துடன் வாழ வழிவகுக்கும் ரமழான் நோன்பு

இஸ்லாத்தின் கடமைகள் ஐந்து; அதில் புனித றமழானில் நோன்பு நோற்பதும் ஒரு கடமையாகும்.

முழு உலகத்தையும் படைத்த அல்லாஹ் மகா சக்தியாளன். அவன் படைப்புக்கள் யாவற்றிலும் தன் சக்தியையும் ஆட்சியையும் செலுத்தியுள்ளான். தன் ஆட்சியிலே உட்பட்டிருக்கும் ஏழைகளும், செல்வந்தர்களும் பிரிந்து விடாமல் ஒன்று பட்டு ஜீவகாருண்யத்துடன் வாழ்வதற்கு றமழானின் நோன்பு வழி வகுக்கிறது

ஏழைகளின் நிலையை செல்வந்தர் அனுபவித்து உணர றம்ழானின் நோன்பு வழி கூறுகிறது.

வறுமையினால், பசியில் வாடும் மக்களின் நிலைமைகளை அனுபவித்துக்

மௌலவி எம். ஐ.
முஹம்மது சாலிஹ்

கொடுக்க குறிப்பிட்ட ஒரே மாதத்தில், ஒரே நேரத்தில் அனைவரும் தம் உணவை நிறுத்தி அல்லாஹ்வை வழிபட்டு பணிந்து நடக்க வேண்டும் என்ற கட்டளையால் இஸ்லாமிய சமூகம் புத்துணர்வு ஊட்டப்படுகின்றது. அத்துடன் அழிந்து போகும் உலகின் ஆசாபாசங்கள் மனிதனை மதிமயக்கி மனிதப் பண்புகளிலிருந்து விலகி விடாமல் அவனைத் தூய்மைப்படுத்தி புனிதனாகவும் இக்கட்டளை மாற்றுகிறது.

நோன்பு உடல் ஆரோக்கியத்தை நல்குவதுடன், பார்வை, கேள்வி, பேச்சு, எண்ணம் யாவற்றையும் கட்டுப்படுத்தி அல்லாஹ்வின் நினைவில்திளைக்கச் செய்து இறையச்சத்தை ஊட்டுகின்



றது.

புனித றம்ழானின் கடமையினால் தங்களைத் தாங்கள் திருத்தியவர்களும் உண்டு; தம் பலவீனத்தால் சீரழிந்தவர்களும் உண்டு. நல் நிலைப் பட்டு திருந்திய அன்பான முஸ்லீம்களுக்கு அல்லாஹ்வின் அருட்கொடையே ''ஈதுல் பித்ர்'' எனும் நோன்புப் பெருநாள்.

இன்றைய தினத்திலே நல்ல உள்ளத்துடன் வறுமையில் வரும் ஏழை மக்களும் உயிருள்ள ஜீவன்தானே, எனக் கருதி அவர்களுக்கும் உணவு, ஆடை என்பனவற்றை பண வசதி படைத்தவர்கள் ஈந்து ஏழை மக்களின் நற் பிரார்த்தனைகளைப் பெற்றுக்கொள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஈத் முபாரக்

ஈதுல் பித்ர் என்றால் ஈகைத் திருநாள் என்று பொருள். ஈகை என்னும் போது மனிதர் தாம் ஒருவருக்கொருவர் ஈயும் ஈகையையே கருத்திற் கொள்கின்றனர். அத்தோடு மாத்திரமின்றி அல்லாஹ் எமக்கு ஈந்துள்ள எண்ணற்ற ஈகைகளை எண்ணி எண்ணி மனத்திற் கொண்டு அவ்வல்ல நாயகனுக்கு நன்றி செலுத்திக் கொண்டே இருப்பவர்களாக நாம் ஆகவேண்டும். இதுவே ஈகைத் திருநாள் நமக்குணர்த்தும் பிரதான பாடமாகும், அல்லாஹ்வுக்காக பசித்திருந்தும், விழித்திருந்தும், தனித்தும், கூடியும் தொழுது நன்றி செலுத்துவோம். நாமும், நமது சகோதரர்களும் நலமே சமாதானத்துடனும் சாந்தியுடன் வாழப் பிரார்த்திப்போம். வஸ்ஸலாம்.

எம். எம். முப்தி

## புனித ரமழானின் சிறப்பு பற்றிய நபி மொழிகள்

எவர் ஒருவர் ரமழான் மாதம் வருவதைக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறாரோ அவருடைய உடம்பை நரகத்தை விட்டும் அல்லாஹு த்த ஆலாஷ்ராமாக்கி விடுகிறான்.

அதாவது அவருடைய உடம்பை நரகம் தின்பது ஹ்ராம்—

ரம்ழான் மாதத்தில் உள்ள நன்மைகளை என்னுடைய உமமத்தினர் அறிந்தார்களேயானால் வருடம் முழுவதும் நோன்பாக இருக்கக்கூடாதா என்று ஆதரவு வைப்பார்கள்—

நிச்சயமாக சுவர்க்கத்திலே எட்டு வாயில்கள் உள்ளன—

அதில் ஒரு வாயிலுக்குப் பெயர் றையான்—

இந்த வாயிலில் நோன்பாளர்களைத் தவிர வேறுபாரும் நுழைய முடியாது—

நான்கு நபர்களுக்குச் சுவர்க்கம் திறக்கப்படுகிறது—

குர்ஆனைத் தினமும் ஓதக் கூடியவர்—

நாவைப் பாதுகாக்கக் கூடியவர்—

பசித்தவர்களின் பசியைத் தீர்க்கக் கூடியவர்—

நோன்பு நோற்கக் கூடியவர்—

மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உமமத்துக்கு இரண்டு ஒளியையும் இரண்டு இருளையும் கொடுத்திருக்கிறேன் என்று கூறினார்—

அப்போது ஹ்ஸரத் மூஸா (அலை) அவர்கள் யாஅல்லாஹ் அந்த இரண்டு ஒளியும் இருளும் என்ன என்று கேட்டார்கள்.

அப்போது அல்லாஹ் இரண்டு ஒளியாகிறது குர்ஆனும்நோன்புமாகும்.

இரண்டு இருள் என்பது கப்றும கியாமத்து நாளும் என்று கூறினார்கள்.

ஆதமுடைய மக்களுடைய சகல அமல்களும் அவனுக்காக இருக்கும் நோன்பைத் தவிர ஏன் என்றால் அது என்னுடையது அதற்கு நானே கூலி கொடுக்கிறேன் என்று அல்லாஹ் கூறுகின்றார்

எவர் ஒருவர் ரமழான் மாதத்தில் நம்பிக்கையுடன் தூய்மையான நல்லெண்ணத்துடனும் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முந்திய சகல பாவங்களும் மன்னிக்கப்படும்.


## றம்ழான் பெருநாள் ★ நல்வாழ்த்துக்கள் ★

அழகிய டிசைன்களில்
கண்ணைக் கவரும் தங்கப்பவுண் நகைகளுக்கும்
ஜொலிக்கும் வைரங்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**கே.என்.எம். மீறான் சாஹிப்**
[தங்கப்பவுண் நகை மாளிகை]
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

"ஏந்தல் நபியின் ஏவல்கள்"
அரிய நூலை மில்க்வைற் சோப்
மேலுறைகள் 25 அனுப்பி
அன்பளிப்பாய் பெற்றுக்கொள்ளுங்கள்

**★ மில்க்வைற் ★**
யாழ்ப்பாணம்.

**S.M.K. Mohamed ★ & Sons ★**
General Merchants & Transport Agents
இல. 49 A, மாவடி வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
COLOMBO OFFICE:
No. 90, SEA BEACH ROAD,
(Near the Super Market)
COLOMBO - 11

தமிழகத்தில் வெளியாகும்
புதிய சினிமாப் படங்களின்
வீடியோ கசெட்டுக்களை
முந்திப் பெற
117 மானிப்பாய் வீதி
ஐந்துசந்தி
யாழ்ப்பாணம்

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
★ பார்சல்கள் ★ கடிதங்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப
**DHL International**
C/o Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 'ஈதுல்பித்ர்' நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள்

★ மார்ட்டின் ★ கிறாண்டி ★ கப்றி
சேட் வகைகளுக்கும் மற்றும்
★ டெனிம் ★ மார்ட்டின் டவுசர்களுக்கும்
★ சிறுவர் சிறுமியர்களுக்கேற்ற றெடிமேட்
ஆடைகளுக்கும்.
**★ சியானாஸ் ★**
77, கஸ்தூரியார் விதி. யாழ்ப்பாணம்.

★ அன்பளிப்புப் பொருட்கள்
★ விளையாட்டு உபகரணங்கள்
★ மணிக்கூடு வகைகள் மற்றும்
★ பான்சி பொருட்களுக்கு
**பான்சி ரேட்ஸ்**
FANCY TRADES
72, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரமான ஜன்னல் கண்ணாடிகட்கும்,
ஏனைய கண்ணாடி வகைகட்கும்,
கண்ணைக்கவரும் படங்களுக்கும்
**கிளாஸ் எம்போறியம்**
192, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

நகரில் பெயர் பெற்ற பான்சி வியாபாரிகள்
MURSHITHA TRADES
★ மணப்பெண்களை அலங்கரிக்கும் தலை நகை
செட் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்.
**முர்ஷிதா ரேட்ஸ்**
75, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உணவுப் பிரியர்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்வதில்
40 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
**பிளவுஸ் ஹோட்டல் & பிளவுஸ் கிறீம்ஹவுஸ்**
சுவையான கோழி - மாடு - ஆடு
புரியாணி வகைளுக்கும்
ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களுக்கும்
சிறந்த இடம்
100, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

மங்கள வைபவங்களை
புகைப்படமாகவும் - வீடியோ படமாகவும்
தரமான முறையில் படம் பிடிப்பவர்கள்
**ஷைரா போட்டோ**
108, மானிப்பாய்வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
அடையாள அட்டை, பாஸ்போர்ட் படங்கள்
குறித்த தவணையில் கொடுக்கப்படும்.

கல்வி உலகின் கலங்கரை விளக்கம்
**ஸாஹிரா கல்வி நிறுவனம்**
A/L 90, 91 O/L (புதிய பாடத்திட்டம்)
ஆண்டு 10, 9, 8, 7, 6
வட மாநிலத்தில் தெரிவு செய்யப்பட்ட
முன்னோடி ஆசிரிய குழுவின் சங்கம சேவையுடன்
நடை பெறுகிறது
★ ஸாஹிரா ★
நாவலர் வீதி. மூஸ்லிம் வட்டாரம்,
(ஐந்து சந்திக்கருகில்)
யாழ்ப்பாணம்.

**★ ஜீவாகாரம் ★**
பாடசாலைப் பிள்ளைகளின்
மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்த
ஜீவாகாரத்தை சுத்தமாகவும் சுகாதாரமாகவும்
தயாரித்து வழங்குபவர்கள்
அண்ணா தொழிலகம்
இணுவில்.

**தரமான கலர்ப்பட பிரதிகள்**
★ அதிகுறைந்த கட்டணத்தில் ...
★ மிகக் குறுகிய காலத்தில் ...
பெற்றிட
ஷப்றாவை நாடுங்கள்
நவீன கம்பியூட்டர் மூலம் பிரதி செய்யப்படுகிறது
**★ ஷப்றா ★**
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

Dress Centre
For The Whole Family
**★ RAJI ENTERPRISE ★**
No. 24, Modern Market, Jaffna.

யாழ் நகரில் சுவை மிகுந்த உணவு வகைகளுக்கு
சிறந்த இடம்: ✶ ஓரியன்ட் ✶
● கோழிப் புரியாணி ● மாட்டிறைச்சி புரியாணி
● ஆட்டிறைச்சி புரியாணி ● கொத்து றொட்டி
இன்னும் இன்னோரன்ன உணவு வகைகளுக்கும்
இனிய குடான பானங்களுக்கும் நாடுங்கள்:
**★ ஹோட்டல் ஓரியன்ட் ★**
விசேஷ ஓடர்கள் உடனுக்கு உடன் கவனிக்கப்படும்
நாவலர் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்டெழுத்தாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நன்கு அனுபவமுடைய தட்டெழுத்தாளர் (Typists) தேவை. 45 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் கல்வி, நற்சாட்சிப் பத்திர மூலப் பிரதிகளுடன் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
அருண் மார்கட்டிங் அன்ட் அட்வட்டைசிங்,
15, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி-4339]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### திரு. முருகேசு யோகேந்திரன்
திதி:-27 - 04 - 1990


மலர்வு: 16 – 07 – 1934　　உதிர்வு: 16 – 04 – 1987

அன்பின் ஒளிவிளக்காய், அறிவின் சிகரமாய், பாசத்தின் பொக்கிஷமாய் விளங்கி நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 3 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

கண்ணன் மருந்துச்சாலை,
கே. கே. எஸ். வீதி
இணுவில்.　　(12378)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் மோகன் மாஸ்ரர்
(முருகேசு ஜெயக்குமார்)
(நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்)

தோற்றம்:- 03 – 05 – 1962　　மறைவு: 27 – 04 – 1988

மரணம் உன்னிடம் தோற்றுப் போனது
மானிடம் அறியா வஞ்சகம் மிக்கோர்
கானக விலங்கிலும் கீழ்மை மிக்கோர்
கொன்றனர் நின்னை கொதிக்குமெம் நெஞ்சம்
உப்பு வெளியில் அன்று நீ சிந்திய அரிய குருதியும்
இன்று நாம் சிந்தும் இருவிழி நீரும்
விடுதலைப் பயிரை விளையுறச் செய்யும்
ஐயாவுன் புன்னகை முகமும் அன்பும்
பொய்யா மொழியும் எங்கோ போயின
கொள்கை உறுதியும் தொல்புலி வீரமும்
பல்வகைப் பண்பும் தருக எமக்கே
போராட்ட வரலாற்றில் தென் கருணையம் பதி
பேர் பெற்றது மகனே உன்னாலே!

இவருடன் வீர மரணம் எய்திய முரளி, பட்சம் ஆகியோருக்கும் எமது அஞ்சலி

பிரிவால் துயருறும்:
அம்மா, அக்கா, தம்பி

'சோளங்கள்'
கரணவாய் தெற்கு.　　(3364)

## சந்தை விலைகள்

சுன்னாகம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 8 00-10 00 | ரூ. 7.00-13.00 | ரூ. 12.00-16.00 |
| வாழைக்காய் | ரூ. 7.00- 8 00 | ரூ. 5.00- 6.00 | ரூ. 12.00-14 00 |
| பயிற்றங்காய் | ரூ. 8 00-10.00 | ரூ. 8.00-10 00 | ரூ. 12.00-16.00 |
| பாகற்காய் | ரூ. 10.00-12 00 | ரூ. 10.00-11 00 | ரூ. 16.00-20.00 |
| கோவா | — | ரூ. 10.00-13 00 | ரூ. 14 00-16.00 |
| லீக்ஸ் | — | ரூ. 20.00-23.00 | ரூ. 30.00-36.00 |
| சரட் (மலைநாடு) | — | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 8 00-10.00 | ரூ. 6.00-10.00 | ரூ. 12.00-16.00 |
| பீன்ஸ் | — | ரூ. 20.00-23.00 | ரூ. 20.00-24.00 |
| பூசணி | ரூ. 3.50- 4 50 | ரூ. 3 00- 4 00 | ரூ. 6.00- 8.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 10.00-12.00 | ரூ. 10.00-12 00 | ரூ. 20.00-25.00 |
| வெங்காயம் | ரூ. 20.00-22.00 | ரூ. 12.00-20.00 | ரூ. 20.00-26.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 30.00-32.00 | ரூ. 28 00-30 00 | ரூ. 30 00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 6 00- 8.00 | ரூ. 6.50- 8.00 | ரூ. 8.00-10.00 |
| வெண்டைக்காய் | ரூ. 10.00-12.00 | ரூ. 9.00-12 00 | ரூ. 12 00-16.00 |
| செத்தல்மிளகாய் | ரூ. 60.00-62.00 | ரூ. 58 00-60.00 | ரூ. 60.00-65.00 |

# தமிழ் பேசும் மக்களின் அபிலாஷை----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சங்களைசுட்டிக்காட்ட விரும்புகின்றேன். "கிட்டத்தட்ட ஒருவருட காலமாகசிறிலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சுக்கள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் முன்னேற்றம் கண்டு வருவதனையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சமாதானப் பேச்சுக்களின்பயனாக இன்று தமிழீழத்தில் அமைதியும், சகஜநிலையும் தோன்றியிருக்கின்றது. இன ஒடுக்குமுறையினாலும், இராணுவ அடக்குமுறையினாலும்தமிழ் பேசும்மக்களின்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதனை இன்றைய சிறிலங்கா அரசு உணர்ந்துஇருக்கின்றது என்பது போல தெரிகிறது. இந்த அமைதிநிலை நீடித்து எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டுமென்பதே எமது விருப்பம். இது சிங்கள அரசியல் தலைவர்களதும் சிங்கள மக்களதும் பார்வையையும், அணுகுமுறையையும்பொறுத்திருக்கின்றது. வரலாற்று ரீதியாக எமதுமக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும் தவறுகளையும் சிங்கள மக்கள் நன்குணர்ந்து மனித நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் எமதுபிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால் நாம் எமது மக்களின் சுதந்திரத்தினையும், பாதுகாப்பையும் நிலை நாட்ட ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கும் சிறிதேனும் தயங்கமாட்டோம்." —என்பதாகும்.

அறிக்கையின் இவ்வம்சம் சரியான தீர்வு முன்வைக்கப்படாத பட்சத்தில் வட–கிழக்கில் என்ன நடக்குமென்பதனை தெட்டத்தெளிவாக கூறுகின்றது என்றே கருதுகிறேன். எனவே தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க அரசாங்கம் ஆயத்தமாக இருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய கால கட்டம் இதுவாகும்.

தற்போதைய இந்திய அரசு இந்தியப்படையின் தோல்வியை ஒப்புக்கொண்டு அதனை திருப்பி அழைத்து நடைமுறையில் தீர்வுக்கான வழியைக்காட்டியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அரசின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்கு வந்து, யுத்தநிறுத்தத்தினையும் கடைப்பிடித்து நடைமுறையில் தீர்வுக்கான வழியையும் காட்டி நிற்கிறது. அரசு தமிழீழ விதடுலைப் புலிகளைபேச்சுவார்த்தைக்கு அழைத்து பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகிறது என்கின்ற பொழுதிலும் கூட, தமிழ்பேசும் மக்களுக்கிருக்கின்ற அரசு சார்ந்த நியாயபூர்வமான சந்தேகங்களை நீக்கி நம்பிக்கை ஊட்டுவதற்கான செயற்பாட்டு வடிவங்கள் எதனிலும் அரசு இன்னும் இறங்கியதாக தெரியவில்லை.

### ஆறாவது திருத்தம்

அரசு ஆறாவது திருத்தச் சட்டத்தினை நீக்குவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை புரிந்துகொண்டு காரியமாற்ற தொடங்கி இருக்கின்றது என்பதை நிரூபித்துக்காட்ட முடியும். ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும். இதுவே நிரந்தர அமைதிக்கான அடித்தளமாகக் கூட அமையலாம். இந்த சபையில் இருக்கின்ற எந்த அரசியல் கட்சியோ இலங்கை வாழ் எந்தச் சமூகமோ, தனி மனிதனோ அமைதியை விரும்பாதவர்களாக இருக்க முடியாது. எனவே இவ் வரலாற்றுக் கடமையானது தனியே அரசு சார்ந்த விடயம் அல்ல. அனைத்து அரசியல் கட்சிகளினதும் கடமையாகும்.

ஆறாவது திருத்தச் சட்டத்தினை வெறுமனே பிரிவினைவாத தடைச்சட்டமாகவோ அல்லது இச் சட்டத்தினை மட்டும் வைத்துக் கொண்டு இந்நாட்டின்ஐக்கியத்தையும், இறைமையையும் பாதுகாக்க முடியுமென்றோ நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் இச்சட்ட மூலத்துக்குள் அடங்கியிருக்கின்ற விடயங்கள் ஓர் இனத்தின் தலைவிதியைப்பற்றியதாகவும், சுய நிர்ணய உரிமைபற்றியதாகவும் இருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கிய மூன்று விடயங்கள் சம்பந்தமாக ஆராயவேண்டியுள்ளது.

★ தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு.
★ குடியேற்றத்திட்டங்கள்.
★ தமிழ்முஸ்லிம்உறவுநிலை பற்றியது.

இதில் முதலாவது விடயம் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் அறிக்கையின் இன்னொரு பகுதியினை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

### தமிழ்- முஸ்லிம் உறவு

எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு உருப்படியான நிரந்தரமான அரசியல் தீர்வை முன் வைக்காமல் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இந்திய அரசு எம்மை நிர்ப்பந்தித்தது. இதனால் ஒரு [illegible] ஏற்பட்டது. முழு அளவிலான இராணுவ பலத்தை பிரயோகித்தும், ஆயுதங்களை களைந்துவிடும் நோக்கில் இந்திய வல்லரசானது பெரிய தோல்வியைத்தான்சந்தித்தது. நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு இன அழிவை எதிர்கொண்டு வந்த எமது மக்களின் உரிமைகள் பற்றியோ நலன்கள் பற்றியோ, பாதுகாப்பு பற்றியோ எந்தவித அக்கறையும் காட்டாமல் எமது மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய ஆயுதங்களைப்பறித்தெடுக்க வேண்டுமென்பதில் மட்டும் இந்திய அரசு கண்ணும் கருத்துமாக இருந்தது. இந்திய அரசு இழைத்த இமாலயத்தவறு இது. இந்த தவறிற்கான கசப்பான வரலாற்று அனுபவத்தை இந்திய அரசு பெற்றுவிட்டது. இந்தியா இழைத்த இந்தப்பெரும் தவறை சிறிலங்கா அரசும் செய்யமாட்டாது என்றே நாம் நம்புகிறோம் என்பதாகும்.

அந்த அறிக்கை முழுவதையும் கூர்ந்து கவனித்தால் தீர்வுக்கான முயற்சியில் "தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு" பற்றி முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளதை இலகுவாக உணர முடியும்.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்திலிருந்து தமிழ் பேசும் மக்கள் அரசின் குடியேற்றத் திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். குடியேற்றத்திட்டம் என்பது குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை பொறுத்தவிடயமன்று. இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் குடியமர்த்தப்படுதல், பயிர்ச்செய்கைக் காணிகள், நீர்பாசன வாய்க்கால்கள், குளங்கள், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்திச்சாதனங்கள் திடீரென வந்து குடியேறியவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருவதினால் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தவர்கள் இதனால் பாதிக்கப்படுதல் என்பதே முக்கிய பிரச்சினையாகின்றது. ஒரு இனத்தின் அடையாளத்தினை அழிக்கின்ற விடயத்தில் அரசு அசிரத்தையாக இருந்தால் ஒழிவழியே வருகின்ற இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது திசை திரும்பிவிடும் ஆபத்துக்கூட ஏற்படலாம்.

தமிழ் முஸ்லிம் மக்களின் உறவைப் பொறுத்த வரையில் சில காலமாக கிழக்கில் பரஸ்பரம் சந்தேகப்பார்வையே நிலவிவருகின்றது. கடந்தகாலங்களில் இருந்த எந்தவொரு அரசியல் சக்தியும் தங்களுடைய குறுகிய அரசியல்நலன்களுக்காக இவ்விரு சமூகங்களினதும் உறவை வலுப்படுத்துவதற்கு பதிலாக முறியடித்தே வந்துள்ளனர் என்பதற்கு வரலாறு சாட்சி பகர்கின்றது. இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு என்பது இவ் இரு சமுகங்களினதும் ஐக்கியத்திலேயே தங்கியுள்ளது. எனவே எங்கே ஐக்கியம் குலைகின்றது என்பதனைப் பார்த்திருந்து பயன்படுத்தும்உபாயத்தினை கைவிட்டு இவ்வுறவு பிரிந்து போகவேண்டிய உறவு அல்ல; ஐக்கியப்படவேண்டிய உறவு என்பதனை அனைத்து சக்திகளும் உணர்ந்து செயலாற்ற வேண்டும். தேசிய இனப் பிரச்சினைத் தீர்வின் போது வடக்கில் வாழும் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியமாகும் என்றுகூறினார். (அ)

## தவறான பெயர்

நேற்றைய உதயனின் ஐந்தாம் பக்கத்தில் வெளியான வீட்டுக்கிருத்திகை அழைப்பு விளம்பரத்தில் காலஞ்சென்றவரின் பெயர் திருமதி நவராணி கணேசராசா (பொன்னுமணி) என்று இருந்திருக்க வேண்டும். அச்சுத் தவறு காரணமாக நவாரணி கணேசராசா (பொன்னுமணி) என்று பிரசுரமாகி விட்டது.

## THANKS

My Grateful Thanks to the sacred Heart of Jesus-blesses Virgin Mary-Saints jude and Antony for a very Big Favour Granted M-F-J

(12377)

# பம்பாய் "மும்பாய்" ஆனது

பம்பாய் மாநகர் இனி மும்பாய் என்றழைக்கப்படும்.

இந்தியலோகசபையில் சபாநாயகர் ரபிராய் இதனை நேற்று அறிவித்தார்.

பண்டைக்காலத்தில் மும்பாய் என்றே பம்பாய் அழைக்கப்பட்டு வந்தது. அந்தப் பெயரை மீண்டும் சூட்ட வேண்டும் என்று சிவசேன இயக்கமும் பாரதிய ஜனதாக் கட்சியும் கோரி வந்தன.

மும்பாய் என்பது ஒரு கடவுளின் பெயர் ஆகும். (உ-எ)

# இவர்களின் குடும்பங்களுக்கு அரசு உதவி வழங்கும்!

கொழும்பு, ஏப்ரல் 27

நாசகார சக்திகளின் நடவடிக்கைகள் காரணமாக கொலை செய்யப்பட்டவர்கள், அல்லது காணாமற் போனவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு உதவி வழங்குவது என்று அமைச்சரவை நேற்று முன்தினம் தீர்மானித்தது.

தனிநபர்குடும்பத்துக்கு 300 ரூபாவும் ஐந்துக்கும் அதற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்ட குடும்பத்துக்கு ஐந்நூறு ரூபாவும் உதவிப் பணமாக வழங்கப்படும்.

குடும்பத்தின் மொத்த எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு மேலதிக உதவிகள் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்படும்.

சமூகசேவைத்திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள மேலதிக நிதியைக் கொண்டு அரச அதிபர்கள் இத் திட்டத்தைச் செயற்படுத்துவர். (ஒ-எ)

### மனிதர்---

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ளுகல் பாரிய நற்பண்பாகும்.

பிறருக்கு உண்டாகும் துன்பத்தை தனக்கு ஏற்பட்டது போல் கருதி ஜீவகாருண்யத்துடன் வாழ்வதைத் தானே இஸ்லாம் விரும்புகிறது. அந்த இன்பதில் வாழும் நாம் அதனை அனுசரித்து அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு பூரணமாகப் பணிந்து வாழ வேண்டுமல்லவா?

சிறப்பான இந்த ஈதுல் பித்ர் அதன் உண்மையான இலட்சியத்தை நிறைவு செய்ய முஸ்லிம்கள் உதவவேண்டும் என்பதை முஸ்லிம்களாகிய நம் உணர்ந்து கொள்ள வேண்டும். நல்வழியில் நடக்கும் அனைவருக்கும் ஈதுல் பித்ர் வாழ்த்துக்கள்!

மலரட்டும் எம் பணிகள்!
வளரட்டும் நற்பண்புகள்
ஒளிரட்டும் உண்மை!
நிலவட்டும் சாந்தி!

### கொழும்பு. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ருந்து பஸ்களில் கந்தளாய், திருகோணமலைப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருகோணமலையிலிருந்து செவ்வாய் இரவு புறப்பட்ட கொழும்பு ரயில் கந்தளாயுடன் மீண்டும் திருமலை திரும்பியுள்ளது. புதன் காலையும் கொழும்பிற்கான ரயில் திருகோணமலையிலிருந்து புறப்படவில்லை. (இ-150)

### விண்ணப்பம்---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
சபையுடன் இணைந்து இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது.

விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கான கடைசித் தினம் 25 திகதியாக இருந்த போதிலும் ஒரு நாள் அது நீடிக்கப்பட்டிருந்தது.

கடந்த 23 ஆம் திகதி ஆயிரக் கணக்கானோர் படிவம் பெற முண்டியடித்து குழப்பியதால் அன்றைய தினம் வழங்கப்படாததுக்குப் பதிலாகவே ஒருநாள் நீடிக்கப்பட்டதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

இதுவரை ஏறத்தாழ ஆறாயிரம் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (இ 51)

### டைம்சஞ்சிகை- - -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
டெஸ்மண்ட் ஆகியோர் கூட்டாக இக்கட்டுரையை எழுதியிருக்கின்றனர்.

இலங்கையில் பத்திரிகைச் செய்தியாளர்கள் கொலை செய்யப்படுவது குறித்து இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சஞ்சிகை விற்பனைக்கு வராது குறித்து கருத்துக் கேட்டபோது அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கூறியதாவது:-

இந்தக் கட்டுரை அரசாங்கத்துக்கு எதிரான பல தவறான தகவல்களைக் கொண்டிருக்கிறது.

இந்தக் கட்டுரை தொடர்பாக அரசாங்கம் சட்ட அறிஞர்களிடம் சட்ட ஆலோசனை கோரி இருக்கிறது. ஆலோசனை கிடைத்த பின்னர் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவு செய்யப்படும்-என்றார். (உ)

### யாழ்.பல்கலை . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முயற்சி 1982 ஆம் ஆண்டிலும், பொறியியல் பீடம் சம்பந்தமான முயற்சி 1980 ஆம் ஆண்டிலும் ஆரம்பமான போதிலும் இன்னும் பூர்த்தியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை —

வெளிவாரிப் பட்டப் பரீட்சை, தொழிலாளர் கல்வி, உயிரியல் தொழில்நுட்ப நிலையம் அமைத்தல் பட்டப்பின்படிப்புப் பீடம் நிறுவுதல், நுண்ணுயிர் இயல் ஒட்டுண்ணி இயல் துறைகளை நிறுவுதல், கணனி விஞ்ஞானத்துறை அமைத்தல், புறநிலைக் கல்வித் விறை. பல் மருத்துவக் கல்லூரி நிறுவுதல் அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை நிறுவுதல் மொழி பண்பாட்டுக் கல்வித் துறையில் உள்ள பிரிவுகளைத் தனிப்படுத்தி புதிய துறைகள் தொடங்குதல், கணித முதுமாணிப் பயிற்சி நெறி ஆகிய பதினொரு திட்டங்கள் குறித்து இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (அ)

## பிறந்த தின வாழ்த்து



### செல்வன் உ. டினேஸ்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த உருத்திரசிங்கம் கலாநிதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் டினேஸ் (27 – 04 – 90) இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை, அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார் சீரும் சிறப்பும் பெற்று சித்திரகூடசித்தி விநாயகனின் அருளைப் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(3366)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 கிறாம்

**அண்ணா கோப்பி**

100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது, இதை வாங்கிப் பாவித்து,

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

# உதயன்

27 - 04 - 1990 வெள்ளிக்கிழமை

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

**" ஜீவாகாரம் "**

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.

**அண்ணா தொழிலகம்**

**இணுவில்.**

## முல்லைத்தீவு விவசாயிகளுக்கு சிறுபோகம் செய்யக் கடன்

முல்லைத்தீவு, ஏப் 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு குறுகிய கால வட்டியில்லாக்கடன் வழங்குவதற்கு மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் முன் வந்துள்ளன.

உர வகைகளுக்கான மானியம் நீக்கப்பட்டதை அடுத்து விவசாயிகளுக்குஉதவும் வகையில் இக் கடன் திட்டம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலத்தின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட காணிகளைஉடையவர்களும், சிறுபோக வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களும் எதுவித நிபந்தனையுமின்றி அவ்வப் பகுதி கமநலசேவை நிலையங்கள் மூலம் விண்ணப்பித்து இக்கடனை பெற்றுக்கொள்ள முடியும்.

இக்கடனைப் பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவங்களை கமநல சேவைகள் நிலையங்களில் எதுவித கட்டணமுமின்றி விவசாயிகள் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் திரு. செ.பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இக்கடன் சம்பந்தமான மேலதிக விவரங்களைஅவ்வப் பகுதி கமநல சேவைகள் நிலையங்களில் விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கமநலசேவைகள் உதவி ஆணையாளர் தெரிவித்தார். (இ)

## எழுத்தறிவு ஆண்டை முன்னிட்டு பூகோளப் படங்கள் அன்பளிப்பு

### 15 யாழ். பாடசாலைகளுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணத்திலுள்ள 15 பாடசாலைகளுக்கு பூகோளப் படங்களை வழங்க ஐக்கிய நாடுகள் சபை யாழ் பிரிவும், ஏசியா பவுண்டேசன் நிறுவனமும் முன்வந்துள்ளன.

இவ்வாண்டின் இரண்டாம் தவணை ஆரம்பிக்கும்போது இப்படங்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஐக்கிய நாடுகள் சபை 1990 ஆம் ஆண்டை எழுத்தறிவு ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது.

இதனை முன்னிட்டு சகல அரசாங்கங்களும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் தத்தமது நாடுகளில் எழுத்தறிவைப் பரப்பும் நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகின்றன.

இதன் ஓர் அங்கமாகவே யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பாடசாலைகளுக்கு பூகோளப் படங்கள் வழங்கப்பட உள்ளன.

பூகோளப் படங்களைப் பெறவுள்ள பாடசாலைகள் வருமாறு:

1. மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், 2. சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம், 3. நெடுந்தீவு மகா வித்தியாலயம், 4. யாழ்ப்பாணம் சென். சார்ள்ஸ் மகா வித்தியாலயம், 5. கனகரத்தினம் மகா வித்தியாலயம், 6. நயினாதீவு மகா வித்தியாலயம், 7. புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம், 8. இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம், 9. பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், 10, சரவெட்டி ஞானாசிரிய கல்லூரி, 11. கோப்பாய் கொத்தணிப் பாடசாலை, 12. கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, 13. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, 14 நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை, 15. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி. (ப)

## சண்டைமூலம் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடாது -பிரேமா

கொழும்பு, ஏப்ரல் 27

பிரச்சினைகளுக்குச் சமாதானத் தீர்வு காணக்கூடியவர்கள் என்பதை நாம் உலகுக்கு நிரூபித்துக்காட்ட வேண்டும்.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுக் காலை சுதந்திர சதுக்கத்தில் நடந்த மத வைபவம் ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

ஜனாதிபதி மேலும் பேசுகையில், ஆயுதம், வன்செயல், சண்டை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடாது என்றும் சொன்னார். (ஒ-எ)

### தமிழீழ ஆய்வு நிறுவனம்

## அபிவிருத்தி வேலைகள் குறித்து ஆலோசனை கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

தமிழீழ ஆய்வு நிறுவனம் வடக்கு,கிழக்கின் அபிவிருத்தி வேலைகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

நிறுவனம் தனது வேலைத் திட்டங்களை தெளிவாகவும் பூரணமாகவும் அதாவது அதன் குறித்த இலக்கினை அடைவதற்காகவும் பொருளாதார அபிவிருத்தி புனர்வாழ்வு சம்பந்தமான துறைகளில் அனுபவமுள்ளவர்களினதும் நிபுணர்களினதும் ஆலோசனைகளையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றது.

குறிப்பாக பொறியியல் துறை, விவசாயத்துறை, மின்சாரத்துறை,மீன்பிடித்துறை, திட்ட அமுலாக்கல் துறை, கைத்தொழில் துறை, வங்கித் துறை, நீர்ப்பாசனத் துறை சம்பந்தப்பட்ட திட்டங்களினைச் செயல்படுத்த இருக்கின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் யாழ் திருநெல்வேலி கிழக்கில் இராமலிங்கம்வீதியில் அமைந்துள்ள தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

## சிறுவர்களுக்கு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை

நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களின்போது நெருப்பினிற் காயமடைந்த சிறுவர்களுக்கு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை உட்பட தேவையான சிகிச்சைகளை அளிக்க லண்டனில் உள்ள வைத்திய குழு ஒன்று முன்வந்துள்ளது.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார். [ஒ-எ]

### தற்போது நடைபெறும் பேச்சு வார்த்தையில்

## இழுத்தடிப்பு, முட்டுக்கட்டையின்றி நேர்மையான தீர்வு வேண்டும்

### இடது கம்யூனிஸ்ட் மே தினச்செய்தி

யாழ்ப்பாணம் ஏப் 27

கடந்த காலங்களைப் போன்று இலங்கை அரசு இழுத்தடிப்பு, ஏமாற்றுதல், முட்டுக்கட்டை போடல், தமது முடிவை திணித்தல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது. நேர்மையான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டால் தான் மற்றொரு அந்நிய தலையீடு ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

மே தினத்தையொட்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை விவரம் வருமாறு

நமது நாட்டிற்குள் புகுந்து வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் மீது பாரிய இராணுவ அடக்கு முறையைக் கட்டவிழ்த்து நாட்டின் சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த இந்திய ராணுவம் வெளியேற்றப்பட்ட புதிய சூழலிலேயே இவ்வாண்டு மேதினத்தை நாம் அனைவரும் எதிர் கொள்கின்றோம்.

இந்தியப்படை வெளியேற்றப் பட்டாலும் அப்படை வருவதற்கு சாட்டாக அமைந்த இனப் பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வு எட்டப்படவில்லை. பேச்சு வார்த்தை ஆரம்ப நிலையிலேயே உள்ளது. கடந்த காலங்களை போன்று இழுத்தடிப்பு, ஏமாற்றுதல், முட்டுக்கட்டையிடுதல், தமது முடிவை திணிக்க முற்படுவது போன்ற செயல்களில் ஈடுபடாது அரசு ஆக்க பூர்வமான வழிகளில் பேச்சு வார்த்தையை முன்னெடுக்க வேண்டும்.

மீண்டும் இரத்த வெள்ளம் ஓடாது இருக்கவும் இன்னொரு தடவை அந்நியத் தலையீடு ஏற்படாது தடுக்கவும் உள்ள ஒரே வழி இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணுவதேயாகும் இதனையே எமது கட்சி வலியுறுத்துகின்றது.

இன்றைய யூ. என். பி. அரசு பதவிக்கு வந்து பதின் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. அது பின் பற்றிய பொருளாதாரக் கொள்கை முற்று முழுதாக நாட்டை அந்நிய ஏகபோகக் கம்பனிகளுக்கு அடிபணிய செய்து நவகாலனித்துவ அடிமைத் தனத்துடன் இறுகப் பிணைத்து விட்டது.

கவர்ச்சி மிக்க திறந்த பொருளாதாரக் கொள்கையாலும் தாராள இறக்குமதியாலும் ஏற்பட்டுள்ள மோசமான விளைவுகளை இன்று நாடு கண்டு அனுபவித்து வருகின்றது. அத்துடன் உலக வங்கி, சர்வதேச நாணய சபை என்பனவற்றின் ஆணைகளுக்கு அடிபணிந்து செயல்படுவதினாலும் அரசு மக்கள் மீது சுமைகளுக்கு மேல் சுமைகளை ஏற்றி வருகின்றது. விலைவாசி உயர்வினால் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு ஏற்ற சம்பள உயர்வு பற்றி அரசு மௌனமாகவே இருந்து வருகின்றது. அதே வேளை வெளிநாட்டு ஏகபோகக் கம்பனிகளும் உள்நாட்டு தரகு முதலாளிகளும் கொள்ளை லாபத்தைப் பெருக்கி வருகின்றனர். ஆதலால் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி சம்பள உயர்வை வழங்கு என்ற கோரிக்கையை உழைக்கும் வர்க்கம் சார்பாக எமது கட்சி முன்வைக்கின்றது.

தன்னுடைய பொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவதைத் தடுப்பதற்கு முன் நடவடிக்கையாகவே ஜனநாயக தொழிற்சங்க விரோதச் சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்தது. அது படிப்படியாக வளர்க்கப்பட்டு அடிப்படை மனித உரிமைகளை அப்பட்டமாகவே மீறி நடப்பதற்கு வழி தேடப்பட்டது.

இனம்காணப்பட முடியாத துணைப்படைகளும், உரிமை கோரப்படாத கொலைகளும் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் காணப்படுகின்றன. இவையாவும் அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளுக்கு வேட்டு வைப்பனவாகவே உள்ளன. வாய் நிறைய ஜனநாயகப் பேச்சும், செயலில் ஜனநாயக – மனித உரிமை மீறல்கள் என்ற நிலையிலேயே அரசு சென்று கொண்டிருக்கின்றது.

எனவே அடிப்படை ஜனநாயக – மனித உரிமைகளை நிலை நாட்டக்கோரும் கோரிக்கையை எமது கட்சி வலியுறுத்துகின்றது.

இம் மூன்று கோரிக்கையையும் இவ்வாண்டு மேதினத்தில் உழைக்கும் மக்கள் சார்பாக எமது கட்சி முன்வைத்து மக்கள் இயக்கங்கள் மூலம் இவற்றை முன்னெடுக்க சகல ஜனநாயக முற்போக்கு தேசபக்த சக்திகளும் முன்வரல் வேண்டும் என அறைகூவல் விடுக்கின்றது.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தேசியக் கொடி முழுக் கம்பத்தில்

யாழ்ப்பாணம், ஏப் 27

எதிர் வரும் மே மாதம் 22 ஆம் திகதி தேசிய வீரர் தினத்தன்று நாட்டின் தேசியக் கொடியை முழுக்கம்பத்தில் பறக்க விடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் அடங்கிய சுற்றுநிருபம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## ஜே. வி. பி. யின் அச்சகம் முற்றுகை!

கொழும்பு, ஏப்ரல் 27

தென்மாகாணத்தில் பெலியத்தவுக்கும் டிக்வெலவுக்கும் இடையில் இரகசியமான முறையில் செயற்பட்டு வந்ததாகக் கூறப்படும் ஜே. வி. பி. யின் அச்சகம் ஒன்றை பாதுகாப்புப் படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டனர்.

அச்சு இயந்திரம் மற்றும் அரசுக்கு எதிரான [illegible] பிரசுரங்கள் [illegible] கைப்பற்றப்பட்டன. (ஒ-எ)

### முன்னர் நிவாரணம் பெறத் தவறிய

## வலிகாமம் மேற்கு மக்களுக்கு

### கன்னாதிட்டி வங்கியில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 27

பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் நிவாரணப் பணம் பெறத் தவறிய வலிகாமம் மேற்கு கிராம சேவையாளர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அன்று உற்பத்தித்திறன் முயற்சி நன்கொடையான நாலாயிரம் ரூபாவும், மீளக் குடியமர்த்தல் நிவாரணப் பணமான ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை மட்டுமே கொடுப்பனவுகள் வழங்கப்படும் என வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நிவாரணம் வழங்கப்படவுள்ள கி. சே. பிரிவுகள் வருமாறு:-

அராலி மேற்கு, அராலி வடக்கு, அராலி தென் மேற்கு, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் கிழக்கு, பொன்னாலை, அராலி தென் கிழக்கு, மூளாய்-

சங்கானை மேற்கு, சங்கானை தெற்கு. சங்கானை கிழக்கு, தொல்புரம், சங்கரத்தை, வட்டு மேற்கு, வட்டு தெற்கு, வட்டு கிழக்கு.

## ரூபா 4,000 நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

இலங்கைவங்கி யாழ்ப்பாண பிரதான கிளையில் நாளை சனிக்கிழமை நாலாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது.

கொடுப்பனவு வழங்கப்படவுள்ள கிராமசேவையாளர் பிரிவுகள் வருமாறு:-

சுதுமலை, நவாலி, மானிப்பாய். (ஓ)

## ஜப்பான் இலங்கைக்கு ரூ. $7\frac{1}{2}$ கோடி நன்கொடை!

கொழும்பு, ஏப். 27

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஜப்பான், இலங்கைக்கு ஏழு கோடி 50 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது சம்பந்தமான உடன்படிக்கையில் இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதரும் இலங்கை அரசின் சார்பில் நிதி அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்டனர்.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் ஜப்பான் தகரங்களில் அடைக்கப்பட்ட மீனை வழங்கும்.

இவற்றை அரசாங்கம் நியாயமான விலையில் மக்களுக்கு விற்பனை செய்யும்.

[illegible] ஜனசக்தி மற்றும் [illegible] நிவாரணத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. (ஒ-எ)

### ஒரு ரூபா பாண்:

## அமைச்சரின் யோசனை நிராகரிப்பு

கொழும்பு. ஏப்ரல் 27

ஒரு ரூபாவுக்கு பாண் தயாரித்து விற்கும் யோசனையை இலங்கை பாண் உற்பத்தியாளர் சங்கம் நிராகரித்து விட்டது.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்கா மல்லிமாராச்சி நேற்று முன்தினம் அவரைச் சந்தித்த [illegible] குழுவிடம் மேற் கண்டயோசனையைத் தெரிவித்திருந்தார். (ஒ-எ)

## ஊர்வலத் தடை ரத்து!

கொழும்பு, ஏப் 27

ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்குவிதிக்கப்பட்டுள்ள தடை மே தினத்தை ஒட்டி நீக்கப்பட்டுள்ளது.

அதற்கு வகை செய்யும் விதத்தில் அவசரகாலச் சட்டத்தின் 12 ஆவது பிரிவு இம் மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவில் இருந்து அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு நடைமுறையில் இருக்க மாட்டாது.

ஜனாதிபதி இதனை வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது ஊர்வலங்கள் நடத்தப்படுவதை அதன் 12 ஆவது பிரிவு தடை செய்கிறது. [எ]

## அவசரகால சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஏப் 27

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 118 பேரும் எதிராக 70 பேரும் வாக்களித்தனர். இருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை, [உ]

## யுனிசெப் உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ். மாநகர சபைக்கு ''யுனிசெப்'' நிறுவனம் தண்ணீர் பௌசர் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

நீர் இறைக்கும் இயந்திரமும் பொருத்தப்பட்ட இந்த பௌசர் பல நவீன வசதிகளைக் கொண்டதாகும்.

## ரூ. 100 கோடி நஷ்டமாம்!

கொழும்பு, ஏப்ரல் 27

கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை ரயில்வேத்திணைக்களத்துக்கு நூறுகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### ஜோசப் மாணிக்கசிங்கம் சாண்டேர்ஸ்

சாவகச்சேரி ஜோசப் மாணிக்கசிங்கம் சாண்டேர்ஸ் (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்) அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற திருமதி சிறோன் மணி சாண்டேர்ஸ் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ரோகிணி பாலறஞ்சன், திருமதி வினோதினி புஸ்பராஜா, திரு. செல்வரட்ணம் சாண்டேர்ஸ், திரு. மோகன் சாண்டேர்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ந. பாலறஞ்சன், திரு. ரோ. புஸ்பராஜா, திருமதி சியாமளா சாண்டேர்ஸ், திருமதி சுதா சாண்டேர்ஸ் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 27-04-1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சாவகச்சேரி தபாலக வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
ந. பாலறஞ்சன்

தபாலக வீதி,
சாவகச்சேரி.

[12965]

### திருமதி ஏரம்பு அன்னமுத்து

ஊரெழு திருமதி ஏரம்பு அன்னமுத்து அவர்கள் 26-4-90 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-4-90 வெள்ளிக்கிழமை மாலை 2 மணி அளவில் ஊரெழுவில் நடைபெறும்.

தகவல்:
ச. கதிரவேலு
(முன்னாள் கல்லூரி அதிபர்)
ச. வடிவேலு
(வேலழகன் சுன்னாகம்)

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(12383)

### திரு. சரவணமுத்து தங்கராஜா

(பிரபல வர்த்தகர் - ஐயர் கடை)
கொழும்புத்துறை

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்புத்துறை மேற்கில் வசிப்பவருமாகிய சரணமுத்து தங்கராஜா (ஐயர் கடை உரிமையாளர்) 24 - 04 - 1990 இல் காலமாகி விட்டார்.

அன்னார் சரவணமுத்து அன்னப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், கந்தையா சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் கணேஸ்வரன் (கனடா) பரமேஸ்வரன் (நோர்வே), சசிகரன் (கனடா), வினோஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரசிங்கம் (சுவிற்சர்லாந்து), தேவசகாயம் (பிரான்ஸ்) காலம் சென்ற திருமங்கநாயகி, தெய்வநாயகி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணபிள்ளை (ஜேர்மனி), தனலட்சுமி (கனடா), சற்குணநாதன், ஜெயலட்சுமி (கனடா), சிறீகாந்தன், வரதலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்புத்துறை மேற்கு விபுலானந்தர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (27 - 04 - 90) பி. பகல் 3.00 மணியளவில் நடைபெற்று துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. சற்குணநாதன்

இல. 19, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

[3369]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org